## வாழ்க! வளர்க! வாழ்வியல் - 87



# மகிழ்ச்சி என்பது பொதுவுடைமை!

மகிழ்ச்சி என்பது தனித்துக் காண்பதா? அல்லது மக்களோடு மக்களாய்க் கூடி இன்புறுவதா? என்பதை அறிந்து கொள்ள ஆவலோடு காத்திருக்கும் வாசகப் பெருமக்களே! வணக்கம்.

''நிறை செல்வம்! நீள் ஆயுள்! சஞ்சலமின்றி மகிழும் மனது!'' இவை மூன்றும் அமைந்து விட்டால் போதும்!, வாழ்க்கையை நாள்தோறும் நாம் கொண்டாடி அனுபவிக்கலாம்!. மகிழ்ச்சி என்பது நிறைவின் வெளிப்பாடு. முதலில் மனம் நிறைவதிலிருந்தே மகிழ்ச்சி புறப்பாடு காண்கிறது. வீடு, வாகனம், வசதிகள், குடும்பம், தொழில், கல்வி, வங்கிச் சேமிப்பு மற்றும் பணம் கையிருப்பு போன்ற மற்ற நிறைவுகளை விடச் சிந்தையின் நிறைவே சிறந்த செல்வம் ஆகிறது. சிந்தை நிறைந்து விட்டால், 'இன்பமே எந்நாளும் துன்பமில்லை!' என்கிற வாழ்க்கை வசமாகிப் போகும்.

மகிழ்ச்சி என்பது மனம் சார்ந்த உணர்வு நிலை; அது எதிர்மறை நிகழ்வுகளால் தோன்றாது; நேரான சிந்தை, நிறைவான செயல்முறை, நேர்முறையாகப் பெறுகின்ற வெற்றிநிலை இவற்றால் மட்டுமே அப்பழுக்கற்ற மகிழ்ச்சி சாத்தியமாகிறது. ஒவ்வொரு தனிமனிதனும் கவலை இல்லாத மனிதனாகத் திகழ வேண்டுமானால் அவன் மனத்தளவில் மகிழ்ச்சியானவனாக இருக்க வேண்டும். எதையுமே நேர்முறையாக எடுத்துக்கொண்டால், மனத்தளவில் துன்பம் அனுகாமல் மகிழ்ச்சியோடு இருக்க முடியும். ஆயினும், துன்பப் படுவது தனிமையில் சாத்தியம் என்றாலும் மகிழ்ச்சிப்படுவதற்குத் தனிமை எந்தவகையிலும் உதவி புரியாது.

அதனால்தான் கவியரசர் கண்ணதாசன், 'தனிமையிலே இனிமை காண முடியுமா?' எனப் பாடலில் அடுக்கிய வினாக்களைத் தொடுக்கிறார். உண்மையில் மகிழ்ச்சி என்பது தனிமனித மன உணர்வு என்றாலும், அது, ஒருவருக்கும் மேற்பட்டோர் கூடிக் கொண்டாடும் போதுதான், கொண்டாடும் மகிழ்ச்சியாகப் பெருகிப் பல்குகிறது. 'உவப்பு' என்கிற சொல்லுக்குப் பெருகிடும் மகிழ்ச்சி என்று பொருள்; ஒரே மாதிரி சிந்தனை அலைவரிசை உடைய புத்திசாலிகள் கூடிப் பேசி மகிழ்வதைத், திருவள்ளுவர், 'உவப்பத் தலைக்கூடுதல்' என்று சிலாகித்துக் கூறுகிறார். அடுத்தவருக்கு மனமுவந்து ஒன்றைத் தருகிறபோது ஒரு மகிழ்ச்சி உண்டாகிறது; அதைப் பெறுகிறவர் பெறும்போது வெளிப்படுத்தும் மகிழ்ச்சியைக் காணும்போது தருபவரின் மகிழ்ச்சி இரட்டிப்பு ஆகிறது. இதனை வள்ளுவர் 'ஈத்துவக்கும் இன்பம்' என்று இரட்டித்து ஒலிக்கிறார்.



முனைவர் சுந்தர ஆவுடையப்பன்

இன்பமோ! துன்பமோ! அது தனிமனிதர் சார்ந்த மனவுணர்வு என்றாலும், பலரோடு பகிர்ந்து கொள்ளப்படும்போது அது அதிகரிக்கவோ குறையவோ செய்கிறது. இன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் அது பன்மடங்கு பெருகுகிறது; துன்பத்தைப் பகிர்ந்து கொண்டால் அது பன்மடங்கு குறைகிறது. மகிழ்ச்சியைப் பொறுத்த வரை அது அடுத்தவரோடு பகிர்வதாலேயே பெருகிப் பரவுகிறது. சிரித்துக் கைதட்டி மகிழும் செயலைப் பலரோடு செய்யவேண்டும்; அழுது புலம்பிக் கண்ணீர் வடிக்கும் செயலைத் தனிமையில் செய்ய வேண்டும். இது மாறிவிடக் கூடாது. தனிமையில் சிரித்துக் கைதட்டி மகிழ்ந்து கொண்டிருந்தால், பார்ப்பவர்கள் நம்மை ஒரு மாதிரி பார்ப்பார்கள். அதேபோல ஊரறிய அழுது புலம்பிக் கொண்டிருந்தால், காண்பவர்களின் ஏளனத்திற்கு நாம் ஆளாக நேரிடும்.

துன்பம் என்பது தனியுணர்வு என்றால், மகிழ்ச்சி என்பது பொது உணர்வு ஆகும். உலகமெங்கும், நகரங்கள் தொடங்கிக், கிராமங்கள் வரை, மக்கள் திருநாட்களைத் திருவிழாக்களாகக் கூடிக் கொண்டாடுவதற்குக் காரணம், அதன்மூலம் மக்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதற்காகவே ஆகும். பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்ற திருநாட்களை மக்கள் கூடிக் கொண்டாடுவதன் மூலம், அவர்களிடையே பரஸ்பரம் நல்லுணர்வு பெருகுகிறது; நல்லெண்ணம் வளர்கிறது; நன்மகிழ்ச்சியும் நலவாழ்வும் அவர்கள் மத்தியில் பரவிப் பெருகுகிறது; அடுத்து, வாழும் நாளெல்லாம் வளமான நாளாக அமைந்து அவர்களின் ஆயுள் நீட்டிப்பிற்கும் நல்வழி பிறக்கிறது. ஆன்மீகம் சார்ந்த நிலையில் ஊர்கள் தோறும் திருவிழாக்கள் வருவதும், திருவிழாக்களில் ஊர்கூடித் தேர் இழுப்பதும் மகிழ்ச்சிப் பரவலாக்கம் சார்ந்த நோக்கம் கருதியதே ஆகும்.

அந்தக்காலத்தில் ஒரு ராஜா நிறைவான ஆட்சி நடத்தி வந்ததால் அவரது ஆயுட்காலம் நீண்டுகொண்டே போனது. சொன்னால் நம்ப மாட்டீர்கள்!, அந்த ராஜா, அந்த நாட்டை ஏழாயிரம் ஆண்டுகளாகச் செவ்வனே ஆண்டு வந்தார். ஒரு நாள் காலை, மகாராணி, ராஜாவுக்கு எண்ணெய்க் குளியல் செய்விக்கும் பொருட்டு, ராஜாவின் தலையை அவிழ்த்து, நல்லெண்ணெய் தடவிக் கொண்டிருந்தபோது, அவரது தலைமுடியில் ஒன்று நரைத்திருப்பதைப் பார்த்து அழத் தொடங்கி விட்டார். 'எட்டிப் பார்க்கும் நரைமுடி, எமனின் அழைப்பு!; எது வந்தாலும் ஏற்றுக்கொள்வோம்!' என்று எந்தக் கவலையுமில்லாமல் ராஜா இருந்தார். ''அதெப்படி சும்மா இருக்க முடியும்? உங்களது ஆயுள் நீட்டிப்பிற்காக நான் கடவுளை நோக்கித் தவம் இருக்கப் போகிறேன்!'' என்று மகாராணி தவமிருக்கக் கிளம்பி விட்டார். '' நீ மட்டும் ஏன் எனக்காகத் தனியே செல்கிறாய்? நானும் வருகிறேன் உன்னோடு தவமிருக்க!'' என்று ராஜாவும் ராணியுடன் கிளம்பி விட்டார்.

ஆயுள் நீட்டிப்பிற்காக ராஜாவும் ராணியும் தவமிருக்கச் செல்லும் செய்தி, நாட்டுமக்களிடம் பரவியது. அவர்கள் எல்லாரும் திரண்டு, அரண்மனைமுன் நின்றுவிட்டார்கள்.

''எங்களின் நலத்திற்காகத்தானே, ராஜாவும் ராணியும் தவமிருக்கப் போகப் போகிறீர்கள்?. எங்களை ஆளும் ராஜாவின் நீளாயுளுக்காக, மக்களாகிய நாங்கள் அனைவரும் சென்று கடவுளிடம் மன்றாடப் போகிறோம்!. எங்களுக்கு வழிவிடுங்கள்! நீங்கள் போக வேண்டாம்!'' என்று கூறிவிட்டு மக்கள் எல்லாரும் அங்குள்ள மலையுச்சிக்குச் சென்று சூரியனை நோக்கித் தவமிருக்கத் தொடங்கி விட்டார்கள்.

மூன்றாண்டு தவத்திற்குப் பின், சூரியக்கடவுள், அந்த நாட்டு மக்களின்முன் வந்து நின்றார். 'எங்கள் ராஜா இன்னும் ஆயிரம் ஆண்டுகள் மகிழ்ச்சியோடு வாழவேண்டும்!' என்ற வரத்தை மக்கள் கேட்டார்கள். மக்கள் கேட்ட வரத்தைத் தந்துவிட்டு சூரியக்கடவுள் மறைந்தார். மக்களும் மகிழ்ச்சியோடு, அரண்மனைமுன் கூடி, ராஜா இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆயுளோடு இருப்பதற்கு வரம் பெற்றுவந்த செய்தியைத் தெரிவித்தார்கள்.

ராஜா மக்களிடம் பேசினார், '' இதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது!; இந்த நாட்டுமக்களாகிய நீங்கள் இல்லாமல், ராணி இல்லாமல், அமைச்சர், படை வீரர்கள் இல்லாமல் நான்மட்டும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து என்ன பயன்? மகிழ்ச்சியோடு இருக்க முடியுமா? மகிழ்ச்சி என்பது எல்லாரும் கூடி வாழ்வதும், கூடிப் பெறுவதும்தானே?. நீங்கள் எவருமில்லாமல், நான்மட்டும் தனித்து ஆயிரம் ஆண்டுகள் வாழ்வது எப்படி வரமாகும்?; அது சாபமாக அல்லவா முடியும்?. நான் இப்போதே தனியாக மலையுச்சிக்குச் செல்லப் போகிறேன்!. நம் எல்லாருக்காகவும் சூரியனை நோக்கித் தவமிருக்கப் போகிறேன்!'' என்று கூறிவிட்டு ராஜா கிளம்பி விட்டார்.

ஓராண்டு கடுமையான தவம்; சூரியக்கடவுள் வந்தார்,' நான் உட்பட எனது நாட்டிலுள்ள அனைவரும் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் மகிழ்ச்சியோடு வாழ வேண்டும்!' என்று வரம் கேட்டார் ராஜா. எப்போதும் வரம் என்பது, சுயநல நோக்கம் இல்லாது, பொதுநலம் சார்ந்ததாக இருக்குமானால் உடனே வழங்கப்படும். வரம் பெற்ற மகிழ்ச்சியை, ராஜா தனது நாட்டு மக்களோடு அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்குக் கொண்டாடுவது எனத் தீர்மானம் போட்டு ஆட்சியை ஆளத் தொடங்கினார்.

உலகில் எந்த மகிழ்வையும் தனித்து அனுபவித்துவிட முடியாது; அனுபவித்தாலும் அது உண்மையான மகிழ்ச்சியாக இருக்காது. கூடியிருக்கிற குடும்பத்தில் ஒரு உறுப்பினராகப் பிறக்கிற மனிதன், பிறகு தனித்த குடும்பமாக மலரும்போது, இன்னொருவரோடு துணை அமைத்துக் கொள்கிறான். இருவரில் தொடங்குகிற இல்லற வாழ்வு, பிள்ளை குட்டிகள், உறவு நட்பு எனப் பல்கிப் பெருகுவதெல்லாம் , வாழ்வின் மகிழ்வுப் பெருக்கத்திற்காகவே தான். பகிர்வதில் பெருகுகிறது மகிழ்ச்சி. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என வாழும் பொதுநல நோக்கே மனிதத்தை உயர்த்தும் மகிழ்வின் நோக்காகத் திகழுகிறது.

மகிழ்வதற்கு இதுதான் காரணம் என்பதெல்லாம் கிடையாது; மகிழ்ச்சி, காரண காரியங்களுக்கு அப்பாற்பட்டது. கரகாட்டக்காரன் படத்தில் வரும் செந்தில் கவுண்டமணி வாழைப்பழ நகைச்சுவைக்குக் காரண காரியம் கிடையவே கிடையாது. திடீரென ஒருவரைப் பார்த்ததும், 'என்ன இன்று மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் போலிருக்கிறது?' என்று கேட்போம். அவருக்குக் காரணம் தெரிந்தால் சொல்வார்; இல்லையென்றால் பதிலுக்கு ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு நகர்ந்துவிடுவார். மனமும் உடலும் நலமாக இருந்தால், செய்கிற செயல்களும் நமக்கு விருப்பமானவையாக இருந்தால், மகிழ்ச்சிக்கென்று தனிக்காரணம் தேவைப்படுவதில்லை.

சிலருக்குச் சமைப்பதில் மகிழ்ச்சி; சிலருக்குச் சாப்பிடுவதில் மகிழ்ச்சி; சாப்பிடுபவரின் நுட்பம் தெரிந்தவர் சமையலராக இருந்தால் மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. மேடையில் ஒருவர் எவ்வளவுதான் முயன்று ஒரு நகைச்சுவையைச் சிறப்பாகச் சொல்ல முயற்சித்தாலும், எதிரே அமர்ந்திருந்து கேட்பவர்கள், அதே கவனத்துடன், பேச்சாளரின் அலைவரிசையோடு ஒத்துப்போகவில்லை யென்றால், நகைச்சுவை சோகச்சுவையாகிப் போகும். மகிழ்ச்சி, உணர்ந்தோருடன் ஒத்துப் போகும் ஒத்திசைவைப் பொறுத்தது.

மகிழ்ச்சி என்பது நிகழ்பொழுதில், அந்தத் தருணத்தை அனுபவிப்பது. பலருக்குக் கடந்த காலங்களை அசைபோடுவதும், அந்தக்காலப் பாடல்களில் கரைந்து மகிழ்வதும் மகிழ்ச்சியாக இருக்கலாம். ஆனால் அந்த மகிழ்ச்சி சொக்கத் தங்க மகிழ்ச்சியாக இருக்காது, செம்பு என்னும் சோகம் கலந்த சுகமான சோகமகிழ்ச்சியாக மட்டுமே அமைந்திருக்கும்.

'உவப்பே உயர்வு!' என்பது மிக உயரிய தத்துவம். மகிழ்ச்சியோடு ஈடுபடுகிற செயல்கள் மட்டுமே வெற்றிகரமான முடிவுகளை எட்டிப்பிடிக்க உதவிடும். மகிழ்ச்சியான மனநிலை, எத்தனை சிக்கலான பிரச்சினைகளு க்கும் எளிதான தீர்வுகாண உதவிடும்; மனம் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தால், உடல் ஆரோக்கியத்திற்குக் கேட்கவா வேண்டும்?. நிறைவின் பொங்கி வழிதலே மகிழ்ச்சி; அதனை அடுத்தவரோடு பகிர்ந்து கொள்வதும், பெருகச் செய்வதும் தவறாமல் நாம் மேற்கொள்ள வேண்டிய பயிற்சி.

எதையுமே தனித்து அனுபவித்துவிட நினைப்பது சுயநலம். பொதுநலக் கோட்டையில் மகிழ்ச்சியின் கொடி பட்டொளிவீசிப் பறக்கட்டும்.

தொடர்புக்கு 9443190098

### அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி சரியும்

# கூட்டணி கட்சிகளை விழுங்கி வளர்வதுதான் பா.ஜ.க.வின் யுக்தி

## திருமாவளவன் பேட்டி

கொடைக்கானல், ஜூன். 8–

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–



பா.ஜ.க. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு வடிவத்தை எடுத்து வருகிறது. உத்திரபிரதேசத்தில் ராமர் வடிவம், மேற்கு வங்காளம் உள்ளிட்ட மாநிலங்களில் துர்காதேவி, மத்திய பிரதேசம், மகாராஷ்டிராவில் விநாயகர் அவதாரத்தை கையில் எடுத்து அரசியல் செய்யும் பா.ஜ.க. தமிழகத்தில் முருகன் அவதாரத்தை எடுத்துள்ளனர்.

வடமாநிலங்களில் பா.ஜ.க. செய்யும் இந்த மாயாஜால மாநாடு தமிழகத்தில் எடுபடாது. தமிழக மக்களும் ஏமாற மாட்டார்கள். சிந்தூர் நடவடிக்கைகளை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பாராட்டி பேரணி நடத்தியதை தமிழிசை சவுந்தரராஜன் விமர்சனம் செய்திருப்பது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

**மேட்ச் பிக்சிங் அரசியல்**

வடமாநிலங்களில் நடைபெறும் தேர்தல் மேட்ச் பிக்சிங் பீகாரிலும் தொடர பா.ஜ.க. முயன்று வருகிறது என ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார். இது உண்மைதான். மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தை வைத்து பா.ஜ.க. பல்வேறு மாநிலங்களில் சூதாட்டம் நடத்தி வருகிறது.

எனவே மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு எதிராக போராடும் நிலை உருவாக வேண்டும். இதை வைத்துதான் பீகார் தேர்தலையும் பா.ஜ.க. சந்திக்க உள்ளது. ஆனால் தமிழகத்தில் இது எடுபடாது.

கூட்டணியில் யாரை சேர்க்க வேண்டும் என்பதை முதல் – அமைச்சர் மு.க.ஸ்டாலின் முடிவு செய்வார். தமிழ்நாட்டை குறி வைத்து பா.ஜ.க. 10 ஆண்டுகளாக பல்வேறு பணிகளை மேற்கொண்டும் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. தமிழிசை, எல்.முருகன், அண்ணாமலை போன்றவர்களை நியமித்து தங்கள் கட்சியை வலுப்படுத்த முயன்றனர். தற்போது நயினார் நாகேந்திரனை அமர வைத்து தென் மாவட்டங்களை குறி வைத்து தங்கள் தேர்தல் சித்து விளையாட்டுகளை நடத்தி வருகின்றனர்.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்களை ஈர்த்து தங்கள் கட்சிக்கு செல்வாக்கை பெருக்க 10 ஆண்டுகளாக பா.ஜ.க. பல்வேறு வேலைகளை செய்து வருகிறது. ஆனால் தமிழ்நாட்டில் அவர்களது எண்ணம் ஈடேறாது.

**கூட்டணி கட்சிகளை விழுங்கும்**

இந்தியாவில் பல்வேறு மாநில கட்சிகளை அழித்த பெருமை பா.ஜ.க.வுக்கு உண்டு. தமிழ்நாட்டிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்த கட்சிகள் காணாமல் போகும் நிலை உள்ளது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன. எனவே அ.தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கவனமுடன் இருக்க வேண்டும். கூட்டணி கட்சிகளை விழுங்கி தங்கள் கட்சியை வளர்ப்பதுதான் பா.ஜ.வின் யுக்தியாகும். தேர்தல் முடிவுக்கு பிறகு அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி பா.ஜ.க.விற்கு செல்லும். ஆனால் தங்களால்தான் அ.தி.மு.க.வுக்கு கூடுதல் வாக்குகள் கிடைத்ததாக பா.ஜ.க. பிரசாரம் செய்வார்கள். வருகிற 2026ம் ஆண்டு பா.ஜ.க.வுடன் கூட்டணி வைக்கும் கட்சிகள் இதை உணர்ந்து எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

வக்பு வாரிய சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி திருச்சியில் வருகிற 14–ந்தேதி வி.சி.க. சார்பில் நடைபெறும் பேரணியில் அனைவரும் பங்கேற்கலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.





மதுரை விமான நிலையத்தில், மத்திய மந்திரி அமித்ஷாவை அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் ஆர்.பி. உதயகுமார், செல்லூர் ராஜூ சால்வை அணிவித்து வரவேற்றார்.

# பா.ஜனதா மையக்குழுவுடன்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் மீண்டும் அ.தி.மு.க–பா.ஜ.க. கூட்டணி உருவாக வாய்ப்பு உள்ளதாக கருதப்பட்டது. இதையடுத்து ஏப்ரல் மாதம் 11–ந்தேதி தமிழகம் வந்த அமித்ஷா அந்த கூட்டணியை உறுதிப்படுத்தினார். மேலும் எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு சென்ற அமித்ஷா, அவர் அளித்த விருந்திலும் கலந்துகொண்டார். அதனை வரவேற்ற அ.தி.மு.க.வினர் உற்சாகம் அடைந்தனர்.

இந்தநிலையில் சட்டமன்ற தேர்தலில் தென் மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையிலும், அதில் வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளை குறிவைத்தும் மதுரையை மையப்படுத்தி மாநில கட்சிகள் முதல் தேசிய கட்சிகள் வரை காய் நகர்த்தி வருகிறது. அதன்படி கடந்த ஞாயிற்றுக்கிழமை மதுரையில் தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அப்போது பா.ஜ.க.வுக்கு எதிரானது உள்பட 22 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பா.ஜ.க. ஆயத்தம்**

அவர்களுக்கு பதிலடி கொடுக்க திட்டமிட்ட பா.ஜ.க., சட்டமன்ற தேர்தலுக்கு தாங்களும் ஆயத்தமாகி விட்டதை அறிவிக்கும் வகையில் பிரமாண்ட நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்தது. அதன் தொடர்ச்சியாக இன்று மதுரையில் பா.ஜ.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் பிரமாண்டமாக நடக்கிறது. ஒத்தக்கடை வேலம்மாள் திடலில் இன்று மாலை நடைபெறும் அந்த கூட்டத்தில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்துகொண்டு தமிழ்நாட்டில் 2026–ல் நடைபெற இருக்கும் சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வியூகம் குறித்து ஆலோசனை வழங்குகிறார்.

முன்னதாக இந்த கூட்டத்தில் பங்கேற்பதற்காக டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று இரவு 10.30 மணியளவில் அமித்ஷா மதுரை வருகை தந்தார். விமான நிலையத்தில் அவரை மாநில பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், முன்னாள் அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன், முன்னாள் கவர்னர் தமிழிசை சவுந்திரராஜன், வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ., மாநில பொதுச் செயலாளர் பேராசிரியர் ராம. சீனிவாசன் உள் ளிட்டோர் வரவேற்றனர்.

**மையக்குழு கூட்டம்**

இதையடுத்து மதுரை சிந்தாமணி பகுதியில் உள்ள நட்சத்திர ஓட்டலில் இரவில் தங்கி ஓய்வெடுத்த அமித்ஷா, இன்று காலை 11 மணியளவில் உலகப்புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்தார். பின்னர் மீண்டும் ஓட்டலுக்கு திரும்பிய அவர் பா.ஜ.க. மையக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டார்.

வழக்கமாக மையக்குழு கூட்டம் என்பது ஒருநாள் முழுவதும் நடைபெறும். ஆனால் குறுகிய காலத்தில் அமித்ஷா வந்துள்ளதால் குறைந்த நேரத்தில் கூட்டம் நடைபெறுகிறது. இதில் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், மேலிட பார்வையாளர்கள் அரவிந்த் மேனன், சுதாகர் ரெட்டி, முன்னாள் மத்திய மந்திரி பொன். ராதாகிருஷ்ணன், முன் னாள் மாநில தலைவர் அண்ணாமலை, வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ., மாநில பொதுச் செயலாளர் ராம.சீனிவாசன், தமிழிசை சவுந்திரராஜன், கே.பி.ராமலிங்கம், கரு.நாகராஜன், கருப்பு முருகானந்தம், கார்த்தியாயினி, பொன் பாலகணபதி, ஏ.பி.முருகானந்தம், கனகசபாபதி, வி.பி.துரைசாமி, எச்.ராஜா உள்ளிட்ட 22 பேர் கலந்து கொண்டனர்.

அப்போது தமிழகத்தில் அமைப்பு ரீதியாக பா.ஜ.க.வை பலப்படுத்துதல், அரசியல் ரீதியாக அதிரடியான சட்டமன்ற தேர்தல் வியூகம் வகுத்தல், அதற்கேற்றவாறு எந்தமாதிரியான முன்னெடுப்புகளை பாரதீய ஜனதா மேற்கொள்ள வேண்டும், அ.தி.மு.க.–பா.ஜனதா கூட்டணி அமைத்த பிறகு தற்போதைய அரசியல் சூழல் குறித்து மத்திய மந்திரி அமித்ஷா கேட்டறிந்தார்.

2026 சட்டசபை தேர்த லில் தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதற் கான ஆலோசனைகளை மையக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

மேலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகள், தென் மாவட்டங்களில் பா.ஜ.க. நல்ல வளர்ச்சி கண்டுள்ளதால் அங்கு கூடுதல் தொகுதிகளில் போட்டியிடுதல், இதுவரை மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகள் மூலம் அங்குள்ள வாக்காளர்களின் தி.மு.க.வுக்கு எதிரான மனநிலையை பா.ஜ.க.வுக்கு ஆதரவான வாக்குகளாக மாற்றுவது உள்ளிட்டவை குறித்து ஆலோசனை நடத்துகிறார்.

**நிர்வாகிகளுடன் ஆலோசனை**

பின்னர் மாலை 4 மணியளவில் ஒத்தக்கடை வேலம்மாள் திடலில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட பந்தலில் நடைபெறும் பா.ஜ.க. நிர்வாகிகளுடனான ஆலோசனை கூட்டத்தில் அமித்ஷா கலந்துகொண்டு பேச உள்ளார். மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், குஜராத் உள்ளிட்ட மாநிலங்களில் வெற்றி வியூகம் வகுத்து அதன் மூலம் ஆட்சியை பிடிக்க காரணமாக இருந்த அமித்ஷாவின் தமிழகம் வருகையும் நிச்சயம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என்று பா.ஜ.க.வினர் நம்பிக்கை யுடன் கூறி வருகிறார்கள்.

அதற்கேற்ப 2026 மிஷன் என்ற இலக்கை நிர்ணயித்து, தி.மு.க. ஆட்சியை வீட்டுக்கு அனுப்பும் வகையில் புதிய திட்டங்களுடன் கூடிய தேர்தல் வியூகத்தை அமித்ஷா தயார் செய்து வைத்துள்ளதாக கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி பாராளுமன்ற தேர்தலில் மிகப்பெரிய அளவில் இரண்டாம் இடத்தை 10 தொகுதிகளில் பெற்றதுடன், அதில் அடங்கியுள்ள சட்டமன்ற தொகுதிகளை கட்டாயம் வென்றாக வேண்டும், தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய கட்சியாக பா.ஜ.க. காலூன்ற வேண்டும் என்பதற்காக அமித்ஷா நேரடியாக களம் இறங்குகிறார்.

**தேர்தல் வியூகம்**

மேலும் இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் தி.மு.க. அரசை வீட்டுக்கு அனுப்ப பா.ஜ.க. நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்தும் வியூகம் வகுத்து அவர் பேச உள்ளார். தற்போது கூட்டணியில் உள்ள அ.தி.மு.க., அ.ம.மு.க., ஓ.பி.எஸ்.சின் அ.தி.மு.க. உரிமை மீட்புக்குழு ஆகியவற்றுடன் பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட கட்சிகளையும் ஒருங்கிணைக்க அமித்ஷா திட்டமிட்டு உள்ளார்.

மேலும் அமித்ஷாவின் இந்த மதுரை பயணத் தின்போது பா.ஜ.க. மாநில நிர்வாகிகளை தனித்தனியாக சந்தித்து தேர்தலுக்கான வேலைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க உள்ளார். கட்சியின் கூட்டணி நிலைப் பாடுகள் குறித்தும் இந்த கூட்டங்களில் விவாதிக் கப்படுகிறது.

**ஓ.பி.எஸ். சந்திப்பு?**

மதுரை வருகை தந்துள்ள அமித்ஷா இன்று மாலை ஓ.பி.எஸ்., டி.டி.வி.தினகரன் ஆகியோரை சந்திக்க வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது. அதன் மூலம் தென்மாவட்டங்கள் உள்பட தமிழகம் முழுவதும் அவர்களுக்கான ஓட்டு வங்கியை அப்படியே அ.தி.மு.க–பா.ஜ.க. கூட்டணிக்கு கொண்டு வரவும் திட்ட மிட்டு அதற்கான வழிமுறைகளையும் அமித்ஷா இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்த இருக்கிறார்.

மதுரையில் இன்று அமித்ஷா பங்கேற்கும் பா.ஜ.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் 2026 சட்டமன்ற தேர்தலுக்கான பிரசாரத்தின் தொடக்கம் என்றும், கட்சியினருக்கு புதிய ஊக் கம் கொடுப்பதாக அமையும் என்றும் கட்சியினர் தெரிவித்தனர்.

**5 அடுக்கு பாதுகாப்பு**

அமித்ஷா வருகையை முன்னிட்டு மதுரை விமான நிலையம், விரகனூர் ரிங் ரோடு, மீனாட்சி அம்மன் கோவில், ஒத்தக்கடை மற்றும் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெறும் வேலம்மாள் திடல் ஆகிய பகுதிகளில் மாநகர போலீஸ் கமிஷனர் லோகநாதன், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அரவிந்த் ஆகியோர் தலைமையில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளது.

# அமித்ஷாவை பூங்கொத்து கொடுத்து வரவேற்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்

மதுரை, ஜூன் 8–

மதுரை ஒத்தக்கடை பகுதியில் இன்று நடக்கும் பா.ஜ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்க மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா, டில்லியிலிருந்து தனி விமானம் மூலம் நேற்றிரவு 10.40 மணிக்கு மதுரை வந்தடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை கலெக்டர் சங்கீதா, போலீஸ் கமிஷனர் லோகநாதன், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மூத்த தலைவர் தமிழிசை, மாநில பொதுச்செயலாளர் ராம.சீனிவாசன், வானதி சீனிவா சன் எம்.எல்.ஏ., வரவேற்ற னர்.

அ.தி.மு.க. சார்பில் முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் ராஜூ, ஆர்.பி. உதயகுமார் ஆகியோர் பூங்கொத்து கொடுத்து வரவேற்பளித்தனர். பின்னர் அமித்ஷா சிநதா மணி பகுதியில் உள்ள தனி யார் ஓட்டலில் நேற்றிரவு தங்கினார். இன்று காலை 11.20 மணியளவில் மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் செய்த அவர், தொடர்ந்து தனியார் ஓட்டலில் கட்சி நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதையடுத்து இன்று மாலை 4.05 மணிக்கு ஒத்தக்கடை பகுதியில் நடைபெறும் பா.ஜ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார். அமித்ஷாவின் மதுரை வருகையையொட்டி மதுரை மாநகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளன.

### கொலம்பியாவில் தேர்தல் பிரசாரம்:

# அதிபர் வேட்பாளர் மீது துப்பாக்கி சூடு; தலையில் குண்டு பாய்ந்தது

## 15 வயது சிறுவன் கைது

போகோட்டா, ஜூன். 8–

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் அடுத்த ஆண்டு அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான பிரசாரங்கள் தீவிரமாக நடந்து வருகிறது.

**துப்பாக்கி சூடு**

தேர்தலில் எதிர்க்கட்சியான பழமைவாத ஜனநாயக மைய கட்சியை சேர்ந்த எம்.பி.யான மிகுவல் உரிபே (வயது 39) வேட்பாளராக களமிறங்கியுள்ளார்.

இந்த நிலையில் மிகுவல் உரிபே, தலைநகர் பொகோட்டாவில் நடந்த பிரசார கூட்டத்தில் பங்கேற்றார். அங்குள்ள போன்டிபோன் பகுதியில் உள்ள ஒரு பூங்காவில் நின்றபடி பொது மக்கள் மத்தியில் பேசி கொண்டிருந்தார். அப்போது அவர் மீது திடீரென்று துப்பாக்கி சூடு நடத்தப் பட்டது.

**ரத்த வெள்ளத்தில்**

மிகுவல் உரிபேவை பின்னால் இருந்து ஒரு நபர் துப்பாக்கியால் சுட்டார். 3 முறை சுடப்பட்டதில் மிகுவல் உரிபே தலையில் 2 குண்டுகள் பாய்ந்தது. இதனால் அவர் ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்து விழுந்தார். உடனே துப்பாக்கி சூடு நடத்திய நபரை பொது மக்கள் மடக்கி பிடித்தனர்.

துப்பாக்கி சூட்டில் மிகுவல் உரிபேவுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. சுயநினைவை இழந்த அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்.

**படுகாயம்**

அப்போது அவரது தலை மற்றும் கழுத்து பகுதிகளில் இருந்து ரத்தம் வெளியேறியது. அதை துணியால் அழுத்தியபடி அழைத்து சென்றனர். படுகாயம் அடைந்த அவர் சாண்டா பே மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகுவல் உரிபேவின் மனைவி மரியா கிளாடியா கூறும்போது, எனது கணவர் உயிருக்குப் போராடி வருகிறார். கொலம்பியர்கள் அவருக்காக பிரார்த்தனை செய்ய வேண்டும் என்றார்.

இதற்கிடையே துப்பாக்கியால் சுட்ட நபர் 15 வயது சிறுவன் என்பது தெரிய வந்தது. அவரை போலீசார் கைது செய்து அழைத்து சென்றனர். அவரிடம் இருந்து துப்பாக்கி பறிமுதல் செய்யப்பட்டது. அவர் துப்பாக்கி சூடு நடத்தியதற்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது. மிகுவல் உரிபே சுடப்படும் காட்சி மற்றும் ரத்த வெள்ளத்தில் அவரை அழைத்து செல்லப்படும் வீடியோ காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

**பத்திரிகையாளர்**

மிகுவல் உரிபே கொலம்பியாவில் நீண்ட அரசியல் பாரம்பரியம் கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரது தாத்தாக்களில் ஒருவர் முன்னாள் அதிபர் ஜூலியோ சீசர் டர்பே ஆவார். உரிபேயின் தாய் டயானா டர்பே ஒரு பத்திரிகையாளர் ஆவார்.

1991–ம் ஆண்டு பிரபல போதைப்பொருள் கடத்தல் மன்னன் பாப்லோ எஸ்கோபருக்கு எதிராக தொடர்ந்து தீவிரமாக இயங்கி வந்தார். இதனால் அவரை எஸ்கோபாரின் கும்பல் கடத்தியது. மீட்க நடந்த முயற்சி யில் டயானா டர்பே படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

VTM லிமிடெட்
பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர்.
CIN : L17111TN1946PLC003270
இணையதளம் : www.vtmill.com தொலைபேசி : 0452-2482595
அறிவிப்பு
செபி (SEBI) நிபந்தனைகள் 2015ம் (பட்டியலிடும் தேவைகள் மற்றும் அறிவித்தல் தேவைகள்)நிபந்தனைகள் 30 மற்றும் 42 க்கு இணங்க இக்கம்பெனியின் இயக்குநர்கள் கூட்டம் 12.06.2025, வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு கப்பலூர், மதுரை-625 008 தியாகராசர் மில்ஸ் வளாகத்தில் உள்ள தலைவர் அலுவலகத்தில் போனஸ் பங்குகளை வழங்குவது குறித்து பரிசீலிக்க நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. போனஸ் பங்குகளை வெளியிடுவதற்கான பதிவு தேதி ஜூன் 11, 2025, போனஸ் விகிதம் 3:2, அதாவது FV ரூ1/-ன் ஒவ்வொரு இரண்டு முழுமையாக செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு வைத்திருப்பவர்களுக்கு FV ரூ1/-ன் மூன்று முழுமையாக செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்குகள். இந்த அறிவிப்பு, பங்கு வர்த்தக நிறுவனத்தின் இணையதளம் www.bseindia.com இல் உள்ளது.
இடம்: சூலக்கரை, விருதுநகர். VTM லிமிடெட்டிற்காக, கா.பிரியதர்ஷினி கம்பெனி செயலாளர்
நாள்: 06.06.2025


தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் – கிருஷ்ணகிரி மாவட்டம்
கோப்பு எண் : அ3 / 2086 / 2025 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 30.05.2025
காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் 15-வது நிதிக்குழு மானியம் (சுகாதாரம்) 2025-2026 -ம் ஆண்டு நிர்வாக அனுமதி வரப்பெற்ற பணிகளின் ரூ.78.20 இலட்சம் மதிப்பீட்டிற்கு மேல் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நெடுங்கல் கிராம ஊராட்சியில் பணிக்கான மின்-ஒப்பந்தப்புள்ளி கோருதல். (கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் / பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி அவர்களின் செ.மு.ந.க எண்: 2894/2025/ஆர்13, நாள்: 28.05.2025)
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்கின்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம் 15-வது நிதிக்குழு மானியம் (சுகாதாரம்) 2025-2026 -ம் ஆண்டு நிர்வாக அனுமதி வரப்பெற்ற பணிக்கு தொகை ரூ.78.20 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்கின்ற இணையதள முகவரியில் இலவசமாக 30.05.2025 முதல் 12.06.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்:
1. மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 12.06.2025 பிற்பகல் 3.00 மணி வரை.
2. மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 12.06.2025 மாலை 4.00 மணி முதல்.
வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) காவேரிப்பட்டினம்
செ.ம.தொ.இ/2755/ஒப்பந்தப்புள்ளி/2025